# ★ புலிகளின் கடிதம் இறுதி அறிவிப்பு அல்ல

## லஷ்மன் கதிர்காமர்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 07 இதழ் 42
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 21-3-1995

(கொழும்பு)
விடுதலைப்புலிகள் இயக்கம் அரசாங்கத்துக்கு இறுதி அறிவிப்பு எதனையும் விடுக்கவில்லை
வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
கடந்த வாரம் விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் திரு வே. பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு அனுப்பி வைத்த கடிதம் தொடர்பாக பி. பி. சிக்கு கருத்துத் தெரி

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் எம்மை மிகச் சிறப்பாகக் கவனித்தனர்

### மடு யாத்திரிகர்கள் பெருமிதம்

(வவுனியா)
மன்னார் மடுத் திருப்பதிக்குத் தென்பகுதியில் இருந்து அண்மையில் விஜயம் மேற்கொண்ட பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தலைமையிலான குழுவினரை, மன்னாரில் உள்ள விடுதலைப் புலிகள் சிறந்த முறையில் வரவேற்றுப் பாதுகாப்பு அளித்தனர் என யாத்திரிகர்கள் தெரிவித்தனர்.
168 வாகனங்களில் வவு

(4ம் பக்கம் பார்க்க)

## ★ உயர்மட்ட மாநாட்டில்

# சந்திரிகா பிரபாவின் கடிதத்தை

# அமைச்சர்களுடன் ஆராய்வு!

## பாதுகாப்பு அதிகாரிகளும் உடனிருந்தனர்!!

[யாழ்ப்பாணம்]
விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் திரு. வே. பிரபாகரன் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தை தீவிரமாக ஆராய்வதற்காக ஜனாதிபதி நேற்று அவசர மாநாடு ஒன்றை நடாத்தினார். முக்கிய அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதியின் செயலர் கே. பாலபத்தபெண்டி, பாதுகாப்புச் செயலர் சந்திரானந்த டி சில்வா, முப்படைத்தளபதிகள், பொலிஸ் மா அதிபர், முக்கிய அரசுத் தலைவர்கள் இந்த உயர்மட்ட மாநாட்டில் கலந்து கொண்டனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - பிரதி அமைச்சர்கள் மன்னாரில் பேச்சுவார்த்தை

(மன்னார்
மன்னாரில் விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கும் அரசாங்கத்தின் பிரதி அமைச்சர்கள் மூவருக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.
மன்னார் மடுவுக்கு அண்மையில் யாத்திரை மேற்கொண்ட பிரதி அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, மிலரோய் பெர்னாண்டோ, பேட்டி திஸநாயக்கா ஆகியோரே மன்னார் மாவட்ட விடுதலைப் புலிகள் தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியவர்களாவர்.

(4ம் பக்கம் பார்க்க)

## ● புலிகள் பாதுகாப்பில் உள்ள

# மேலும் 22 படையினரின்

## விடுவிப்பு பற்றி பெண்டி நம்பிக்கை

(கொழும்பு]
விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் உள்ள மேலும் 22 படையினரும் விரைவில் விடுவிக்கப்படுவர் என தாம் நம்புவதாக ஜனாதிபதியின் செயலர் கே. பாலபத்த பெண்டி தெரிவித்துள்ளார். இது குறித்து கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளதாவது:
16 பொலிசார் அண்மையில் விடுதலைப்புலிகளால் விடுதலை செய்யப்பட்டனர். இவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசியப்பொருட்கள் யாழ். வந்து சேர்வதில்லை

### விடுதலையான கைதி தெரிவிப்பு

(கொழும்பு)
அரசினால் தடை நீக்கம் செய்யப்பட்ட பொருட்கள் ஒழுங்கான முறையில் யாழ்ப்பாணம் வந்து சேர்வதில்லை
என விடுதலைப் புலிகளால் அண்மையில் விடுதலை செய்யப்பட்ட பொலிஸ் கைதி ஒருவர் தெரிவித்ததாக கைத்

(4ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழ் அகதிகள் இன்று திருமலை வருகை

[திருமலை)
தமிழகத்திலிருந்து இறுதிக் கட்டமாக அனுப்பப்பட்ட ஈழத்தமிழ் அகதிகள் இன்று திருகோணமலை வரவுள்ளனர்
கடந்த மாதம் 26-ம் திகதி ஆரம்பமான அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கை மூலம் திருமலைக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து திரும்பிய 227 இல. தமிழ் அகதிகள் யாழ். வர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
இந்தியாவில் இருந்து அண்மையில் இலங்கை திரும்பிய தமிழ் அகதிகளில் 277 பேர் யாழ்ப்பாணம் வர உள்ளனர்.
எதிர்வரும் 24ம் திகதிஇங்கு வரும் இவர்களை வவுனியா சர்வதேச செஞ்சிலுவைச்

(4-ம் பக்கம் பார்க்க)

## உயர் பெறுமதி முத்திரை விநியோகம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் தட்டுப்பாடாக உள்ள உயர்ந்த பெறுமதிமிக்க முத்திரைகளை யாழ். செயலகம் கொழும்பிலிருந்து எடுத்து வந்து பொது மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்து வருகின்

(4ம் பக்கம் பார்க்க[

### சம்மாந்துறை

## பல்கலைக்கழக கல்லூரி மாணவர் உண்ணாவிரதம்

(கொழும்பு)
சம்மாந்துறை இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்கள் நேற்று முதல் உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.
தமக்கு நிரந்தர இடம் ஒதுக்கித்தரும்படி கோரியே மேற்படி மாணவர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

## ★ கிழக்கு மாகாணத்தில்

# புலிகள் ஆயுதத்துடன் நடமாட அனுமதிக்கப்பட வேண்டும்

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுவதற்கு அனுமதிக்கப் படவேண்டும் என்று தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.
தற்போது கிழக்கு மாகாணத்தில் தங்கியுள்ள திரு.கரிகாலன் அங்குள்ள நிலைமையை

(4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### கணக்காளர் தேவை

யாழ். நகரிலுள்ள தொழில் நிறுவனத்திற்கு சிறிய கணக்குப்பார்ப்பதற்கு பெண் கணக்காளர் தேவை. 22ம் திகதிக்கு முன்னதாக காலை 8 மணிக்கு முன் நேரில் வரவும். சாயி இல்லம் 68A ஐயனார் கோவிலடி வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

எ-4836)

### வீடு தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை. பகுதியாகவும் இருக்கலாம். கொக்குவில் ஆனைக்கோட்டைப் பகுதிகளும் விரும்பத்தக்கது. முழு விபரங்களுடனும் தொடர்பு கொள்க. த. ஜெயக்குமார், தாவடி, கொக்குவில்.

[ஏ-4838]

### ஏல விற்பனை

நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தில் புதிய லுமாலா, ஏசியா, ஈஸ்ட்ரேன் துவிச்சக்கரவண்டிகள் 24-3-95வெள்ளி காலை 9-00 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. பொதுமுகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ சங்கம்.

(ஏ-4841)

# ஐரோப்பிய நாடுகளில் வன்முறையில் ஈடுபடும் தமிழர் அதிகரிப்பு

(சூரிச்)

இலங்கைத் தமிழ் அகதிகளை நாடு கடத்தவும், அவர்களுக்கெதிராக கடும் போக்சை கண்டிக்கவும் ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்துதிட்டங்கள் தீட்டும் இவ்வேளையில் ஐரோப்பிய நாடுகளில் தமிழர்கள் வன்முறைகளில் ஈடுபட்டு வருவதும் அதிகரித்துள்ளது.

இதுகுறித்து அங்குள்ள தமிழ்மக்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளனர். ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ் அகதிகளில் ஒரு சிலர் அராஜக வன்முறைகளில் ஈடுபடுவதால் தமிழ்மக்கள் பொதுப்படையாக பல துன்பங்களை அனுபவிக்க நேரிட்டுள்ளது.

விளையாட்டுப் போட்டிகளில் ஏற்படும் கோஷ்டி மோதல்களை தவிர்க்க விளையாட்டு மைதானங்களை வழங்க சுவிஸ் அதிகாரிகள் மறுக்கிறார்கள அண்மையில் வன்முறைக் குற்றச்சாட்டின் பேரில் சுவிஸ் பொலிஸார் தமிழர்பலரை கைதுசெய்துள்ளனர். தற்போதுஇவர்கள் மீதுவழக்கும் தொடரப்பட்டுள்ளது வேறு சிலர் நாடு கடத்தப்படவுள்ளனர்.

இதேபோன்றே பிரான்ஸ், கனடாவிலும் பல குற்றச் சம்பவங்களில் இலங்கைத் தமிழர் ஈடுபட்டுள்ளதாகவும் இதனால் அந்நாட்டு பொலிஸார் இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ரி-சி

## ஆயிரம் ஈழ அகதிகள் திருப்பி அனுப்பபட்டனர்

(சென்னை[

தமிழகத்திலிருந்து ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று நிக்கோபர் கப்பலில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்,

இதேவேளை மேலும் 4 500 ஈழ அகதிகள் அடுதத கட்டமாக திரும்பி அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. -ரி

## பெண்களுக்கு இலவச மனைப் பொருளியல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் படித்துவிட்டு வேலை அற்றிருக்கும் பெண்களுக்கு இலவசமாக மனைப் பொருளியல் பயிற்சிநெறிகளை ஆரம்பித்து நடாத்திவருகிறது.

இப்பயிற்சி நெறியில் உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்தி சிற்றுண்டி வகைகள் தயாரித்தல், பனை ஓலையைக் கொண்டு பலவகையான அலங்காரப் பொருட்கள் தயாரித்தல், கழிவு தாழ்களில் அலங்காரப் போருட்கள் தயாரித்தல், பூவேலைகள் சிகை அலங்காரம், தையல் பயிற்சி கோலம் போடுதல் போன்ற பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டுவருவதாக இந்நிலையத்தின் பொறுப்பாளர் திருமதி சரோஜா சிவசந்திரன் தெரிவித்தார்.

இப்பயிற்சி நெறியில் தற்பொழுது 85 பெண்கள் சேர்ந்து பயிற்சி பெற்றுவருவதாகயும் அயர் மேலும் தெரிவித்தார். 162-சி

பத்து வருடங்களாக

## முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவை பாவனை

(கொழும்புத்துறை)

கடந்த 10 வருடங்களாக முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவை உபகரணங்களில் பாவனையாளர்களுக்கு பொருள்கள் விநியோகித்து வந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட செயலக நிறுவைகள் அளவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

பாவனையாளர்களிடமிருந்து கிடைத்த புகார்களையடுத்து கடந்த வாரம் உள்நாட்டு வியாபாரத் திணைக்களத்தைச் சேர்ந்த நிறுவை அளவைகள் பரிசோதகர்களால் குடாநாட்டிலுள்ள வர்த்தகத் திணைக்களக் கிளைகளில் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின்போது இவ்விடயம் அறிய வந்துள்ளது

அன்றையதினம் சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் கிளையில் சீனி வாங்கிவந்த பாவனையாளர்களின் சீனியை நிறுத்துப் பார்த்தபோது மூன்று கிலோ சீனியில் 100 கிறாமும் இரண்டு கிலோ சீனியில 75 கிறாமும் குறைந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட வர்த்தகத் திணைக்களத்தின் கிளைமேல் நடவடிக்கை எடுப்பதற்காக வர்த்தக திணைக்களத்தின் வட பிராந்திய உதவி ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. 154-ரி

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 1-30 மணிக்கு அதிபர் பு. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

### பாதிப்புற்றோர் விபரம்

(அரியாலை)

யாழ். தீவக மக்கள் நலன் காக்கும் கழகத்தினரால் யாழ் அத்தியடி புதுவீதியிலுள்ள மேற்படி கழகப் பணிமனையில் வைத்து பதிப்புற்ற மக்கள் விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாக தெரிய வருகின்றது.

—59

கனடாவில்

## காணமல்போன யாழ்.வாசி பற்றி விசாரணை நடக்கிறது

(ரொறன்ரோ)

கனடா ஸ்காபரோ நகரில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 23-ம் திகதி காணமல் போய் பின் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட கல்வியங்காட்டைச் சேர்ந்த பொன்னையா பாலச்சந்திரனின் மரணம் குறித்து கனடாப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தமது காரில் சென்றுகொண்டிருந்த இவரது கார் 4 நாட்களுக்குப் பின் அனாதரவான நிலையில் மீட்கப்பட்டது எனினும் இவர் பற்றிய தகவல் அப்போது கிடைக்கவில்லை. பின்னர் கடந்த ஜனவரி மாதம் 19ம் திகதி சனநடமாட்டம் அற்ற பகுதியொன்றிலிருந்து இவரது சடலம் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் அழுகிய நிலையில் மீட்கபட்ட்து.

தற்போது இவரது மரணம் குறித்து இலங்கையர்கள்பலர் விசாரிக்கபட்டுள்ளதாகவும். விரைவில் இவரது மரணத்திற்சான காரணம் கண்டுபிடிக்கப்பட்டுவிடுமெனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். (162-சி)

## வன்செயலினால் சேதமான ஆலயங்களுக்கு நிவாரணம்

(உடுவில்)

வன்செயல்களினால் சேதமடைந்த ஆலயங்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளன. மதவழிபாட்டு தலம் ஒன்று வன்செயல் காரணமாக சேதமுற்றால் இதற்கான நிவாரணம் வழங்கப்படுமென புனர்வாழ்வு, புனரமைப்பு, கப்பல்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக மேற்படி அமைச்சின் பணிப்பாளரால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் நிவாரணம் பெறுவதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 24-ந்திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கும்படி அறிவித்துளளார்

விண்ணப்பப்படிவங்கள் அந்தந்த பிரிவுபிரதேச செயலங்கள் மூலம் பெறப்பட்டு கிராமசேவகர்கள் ஊடாக நிரப்பி அனுப்பி வைக்கப்பட வேண்டும் —109-ரி

### சேத விபரம் திரட்டு

(சொழும்புத்துறை)

சிறிலங்கா இராணுவத்தின் அண்மைக்கால வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட முழுமையான இழப்புகள் தொடர்பான விபரங்களை தற்போது யாழ். பிரதேச செயலகம் திரட்டி வருகிறது.

சேதவிபரம் திரட்டும் பணிகள் தற்போது இப்பகுதிக் கிராமசேவை அலுவலர்கள் மூலம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. -154

### 72 பத்திரிகையாளர் கொல்லப்பட்டனர்

(கொழும்பு)

கடந்த ஆண்டு உலகெங்கிலும் 72 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர் என்றும் 173 பேர் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள் என்றும் பத்திரிகையாளரின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட குழு ஒன்று தெரிவித்துள்ளது.

அல்ஜீரியாவில் மாத்திரம் 19 பத்திரிகையாளர்கள் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். அண்மைக் காலமாக இலங்கையிலும் பத்திரிகையாளர்கள் பல இடைஞ்சல்களுக்கு உள்ளாகி வருவதும் குறிப்பிடத்தக்கது. -கே


6—ம் மாத

## நினைவஞ்சலி

பிறப்பு : 15-03-1952



கனடாவில் காணமல் போனமை : 23-10-1994

### பொன்னையா பாலச்சந்திரன்

[ கல்வியங்காடு — கனடா ]

கனடா ஸ்காபரோவில் 1994 - 10 - 23-ம் திகதி அகாலமரணமடைந்த கல்வியங்காட்டைச் சேர்ந்த

பொன்னையா பாலச்சந்திரன் [ குட்டி ]

அவர்களின்

6—ம் மாத நினைவு தினத்தை

மிக உருக்கத்துடனும கவலையுடனும்

இன்று [ 21 - 03 - 1995 ]

நாம் அனுஷ்டிக்கின்றோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து இதய அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

து. கோணேந்திரன் ( மைத்துனர் )

ஆறுமுகம் ஒழுங்கை,
3-ம் கட்டை,
கல்வியங்காடு, நல்லூர்.

கோ. பாலசௌந்தரி ( சகோதரி )

கோ. பாலேந்திரன், கோ. நிஷாந்தி ( மருமக்கள் )

(சி-1418)


## ஆலயங்கள் மீண்டும் புதுப் பொலிவு பெறவேண்டும்

(யாழ்ப்பாணம்)

முன்னைய காலத்திலே ஆலயங்கள் எவ்விதம் அறச்சாலைகளாக மிளிர்ந்தனவோ அதே நிலைக்கு மீண்டும் புதுப் பொலிவு பெறவேண்டும். இந்த நோக்கை முதுரையாக கொண்டே ''இந்து தர்மம்'' சஞ்சிகை எம்மால் வெளியிடப்படுகிறது. ஆத்ம உணர்வோடு கலை வளர்க்கும் ஆலயங்கள் தர்மம் பேணும் கேந்திர நிலையங்களாக திகழ வேண்டும்.

இவ்வாறு இந்து சமயப் பேரவை இந்து தர்மம் மலர்-6 வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய இந்து சமயப் பேரவைச் செயலாளர் திரு. சக்திகிரிவன் குறிப்பிட்டார்.

இவ்விழா சுன்னாகம் ஐயனார் கோயில் மண்டபத்தில் பேரவைத் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் நடைபெற்ற போது தொடர்ந்து பேசிய திரு. சக்திக்கிரிவன் கூறியதாவது: ஆலயங்கள் பக்தி உணர்வை வளர்ப்பதோடு, பண்பாட்டைப் பேணும் பல்கலைக்கழகமாக திகழ்கின்றன, எமது கலை, கலாசாரம் எல்லா இடங்களிலும் காலச்சூழ்நிலையால் மாறுபட்டாலும் ஆலயங்களில் இம்மாற்றம் ஏற்படாதிருப்பது ஆலயங்களின் பண்பாட்டிற்கும் கலை கலாசாரத்தற்கும் கிடைத்த பெரு வெற்றியாகும்.

இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திரு. மா. வேதநாதன், மாவை ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள், சிவானந்த குருகுல பரிபாலன சபை செயலாளர் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்களும் உரையாற்றினர்.

### ஜெனறேற்றர் அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமியார் கோவிலுக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பொதுமக்கள் ஒருங்கிணைந்து சுமார் அறுபது ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய ஜெனறேற்றர் ஒன்றினைப் பங்குனி மாத உத்தரம் திருவிழா தினமான கடந்த 17ம் திகதி வெள்ளிக்கிழமை அன்பளிப்பாக ஆலய நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர். -154

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

### மணிவாக்கு

சத்தியம் - அதைக் காப்பாற்றுவதற்கு எத்தனை உத்தமர்கள் செத்திருக்கிறார்கள். அதை அவமானப்படுத்துவதற்கும் எவ்வளவு பெரிய மனிதர்கள் அவதரித்திருக்கிறார்கள்.

- கண்ணதாசன்

## நமது நோக்கு

### படை விலகல்!

வட அயர்லாந்தைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் பிரித்தானியா உலகின் முன்னணி நாடுகளில் ஒன்று.

ஒரு காலத்தில் - எல்லாக் கண்டங்களிலுமே தனது செல்வாக்கைச் செலுத்தி, நாடுகளைக் கைப்பற்றி, பேரரசை நிறுவிப் பெரிய பிரித்தானியா என்ற பேரோடும் புகழோடும் திகழ்ந்ததை நாம் மறந்து போகவில்லை!

''எமது பேரரசிலேயே சூரியன் உதிக்கிறது; மறைகிறது!'' என மார்தட்டிப் பேசியிருக்கிறான் அந்தப் பேரரசின் தலைவன் ஒருவன்

இன்று - அதே பிரித்தானிய அரசு வெளியிட்ட அறிவிப்பு என்ன தெரியுமோ?

வட அயர்லாந்திலிருந்து ஒரு பகுதிப் படையினரைத் திருப்பி அழைக்கப் போவதாக அறிவித்துள்ளது.

தனது முழுப் பிரசார பலத்தையும பிரயோகித்து அயர்லாந்துப் பிரச்னை ஒரு பயங்கரவாதப் பிரச்னை என்று பிரசாரம் செய்து வந்தது.

அது மாத்திர மல்ல - தனது பண்டைய படைபலப் பெருமையை நினைவில் வைத்துக் கொண்டு பாதுகாப்பு நடவடிக்கைகளையும் செயற்படுத்தி வந்தது.

ஆனால் - மக்கள் எழுச்சியை இராணுவ பலத்தால் தடுத்துவிட முடியாது என்பது மாத்திர மல்ல, கெரில்லா யுத்தத்திற்கு ஈடு கொடுக்க முடியாதிருப்பதையும் உணர்ந்து கொண்டது.

ஆக்கிரமிப்புப் படைகளின் செயல்கள் மக்களைத் திசை திருப்பாது என்ற பாடத்தைக் கற்றுக் கொண்டிருக்கிறது.

இதேபோல - மெக்சிக்கா அரசும் அந்த நாட்டின் ஒரு பகுதியிலே போராளிகளின்மீது ஏவிவிட்ட இராணுவத்தைத் திருப்பிப் பெறுவதாக அறிவித்துள்ளது.

ஆக்கிரமிப்புப் படைகள் நிரந்தரமாக நிலைகொள்ள முடியாது என்பதுதான் உலக வரலாற்று உண்மை.

படை பலத்தைக் காட்டி, தன்னிச்சையான தீர்வைத் திணித்துவிடலாம் என்ற எண்ணம் மறைந்து வரும் காட்சிகளை, யதார்த்த நிலையை அரசு விரைவாக உணரும் என நம்புகிறோம்!

இல. அரசியலமைப்பு சட்டத்தில்

# துணை அதிபராக தமிழரை நியமிக்கும் விதத்தில் மாற்றம் வேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் துணை அதிபராக தமிழர் ஒருவரை நியமிக்கும் விதத்தில் அரசியலமைப்புச் சட்டம் மாற்றியமைக்கப்படவேண்டும்.

இவ்வாறு இ. தொ. கா. புளொட், மலையக மக்கள் முன்னணி, ஈ. பி. டி. பி. ஆகிய கட்சிகள் இணைந்து அரசியல் அமைப்பு சீர்திருத்தம்தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக் குழுவிடம் முன்வைத்துள்ளன.

இலங்கையில் நிலவும் இனப் பிரச்னைக்கு இதன் மூலமும் தீர்வுகாண முடியுமெனவும் இக்கட்சிகள் நம்புகின்றன. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நாட்டின் அதிபராக பதவியேற்கும்போது துணை அதிபராக தமிழர் ஒருவர் நியமிக்கப்படுவதன் மூலம் பலசிக்கல்களை தவிர்க்கமுடியும் எனவும் இக்கட்சிகள் கூறியுள்ளன.

இக்கட்சிகள் கூட்டாக முன் வைத்துள்ள யோசனைகள் சிலவருமாறு: வடக்கு-கிழக்கு தமிழர்களின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இனப்பிரச்னைக்கு சமஷ்டி கூட்டாட்சி மூலம் தீர்வு காணப்படவேண்டும், வடக்குகிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களை கருத்தில்கொண்டு அவர்களுக்க 'அக சுயாதிக்க சபை' ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். மலையக மக்களின் உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்பனவாகும். -ரிசி

## பலதும் பத்தும்

### பாற் பத்தியம்

நிறையுணவாக மாத்திரமா பால் அமைகிறது? நோய் வராது தடுக்கவும, நோயை மாற்றவும், நோயால் வாடியோரைத் தேற்றவும் பால் மருந்தாக அமைகிறது.

அரேபிய, ஜேர்மன் நாட்டு மருத்துவர்கள் பாற் பத்தியத்தை வலியுறுத்துகிறார்களாம். ஜேர்மனிய வைத்தியர் போயர் என்பார் ''திட்டமான பாற் சிகிச்சையால் தீராத நோய்களையும் தீர்க்கலாம்!'' என்கின்றார்.

இதனை எமது முன்னோர் அறிந்து பாலைப் போற்றி வந்தார்கள். ''பாலும் நெய்யும் உண்ணலுற்றார் பாரில் கொடிய பிணியற்றார்!'' என்கிறார் சேக்கிழார் ''அமுத மதுரப்பால்'' என்றும் வர்ணித்தார் அவர்.

அமுதம் என்றால் என்ன? சுவையுடையது: தூய்மையுடையது: எப்போதும் இன்பமாக வாழச் செய்வது உயிரை அழியாமற் காப்பது: நோய் வராமல் தடுப்பது!

— மயூரன்

## இராசி பலன்

**21—3—1995**

செவ்வாய்க்கிழமை

**(தமிழுக்கு பங்குனி—07)**

பஞ்சமி முன்னிரவு 10-25 வரை: விசாகம் மரண யோகம் பிற்பகல் 4-26 வரை: இராகுகாலம் மாலை 3-18 முதல் 4-48 வரை: சுபவேளை காலை 10-48 முதல் 12-18 வரை.

மேடம்- அவசியமற்ற தன்மை. சில கஷ்டம், பண முடை.

இடபம், தன ஆதாயம், சாதனை மிகுதி, பயனுள்ள செயல்.

மிதுனம்- ஒத்துழைப்பு, பெரியோர் ஆசீர்வாதம், தியாகம்.

கடகம்: கடன் கொடுத்தல், தடுமாற்றம், மனச்சங்கடம்.

சிங்கம்- கலகப் போக்கு, கணவர்பிரிவு, உறவினர் பகை.

கன்னி- இனசனமகிழ்ச்சி, தொழில் மேன்மை, பெருந்தன்மை.

துலாம்: வீண் விரயம். திருப்தியற்ற நிலை, காரிய தாமதம்.

விருச்சிகம்: புத்திரர்சிறப்பு, விவகாரங்களில் வெற்றி, புகழ்.

தனுசு- பணியாள் துயரம், மனச்சோர்வு, வாகன செலவு.

மகரம்- முயற்சி பலிதம், இனிய சகவாசம், பயணம்:

கும்பம்- புதிய திருப்பம், வெகுமதி, குடும்ப சந்தோசம்

மீனம்- அவமானம், குடும்ப சங்கடம், எதிரிகள் தொல்லை.

— ஜோஸ்யர்

# 3250 அடையாள அட்டைகள் யாழ். வருகின்றன

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களின் 3250 அடையாள அட்டைகள் சில தினங்களில் யாழ் செயலகத்திற்கு வந்து சேரவுள்ளன.

இவ் அடையாள அட்டைகளை ஆட்பதிவுத்திணைக்கள ஆணையாளர் யாழ். செயலக உத்தியோகத்தர் ஒருவரிடம் கொழும்பில் வைத்து கையளித்துள்ளார் என்று தெரிவிக்கப் படுகிறது. 71-ரி

# பரீட்சை ஆள்மாறாட்டம் மாணவருக்கு தண்டனை!

[கொழும்பு]

1993ம் ஆண்டு இடம் பெற்ற க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் ஆள் மாறாட்டம் செய்த குற்றத்திற்காக இரு மாணவர்களுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

காலி நீதிமன்றில் இடம் பெற்ற வழக்கில் பிரஸ்தாப மாணவாகள் இருவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டதால் காலி நீதவான் மேற்படி தண்டனையை வழங்கினார். —ரி

ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு

# சம்பள அதிகரிப்புடன் ஓய்வூதியம் வழங்கப்படும்

(கொழும்பு)

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 6ம் திகதிக்கும் டிசம்பர் 31ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தின்போது ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் அதிகரிக்கப்பட்ட சம்பளம் ஓய்வூதியத்துடன் வழங்கப்படவுள்ளதாக கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் என். பி. ரி. பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இதுசம்பந்தமான சுற்றறிக்கை ஒன்று சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் பிரக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம்முதல் ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளதும் இச்சம்பள அதிகரிப்பு இந்த மாத சம்பளத்துடன் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப் படுகிறது. -சி-க-ரி

உலக நாடுகளில்

# ஆசிய நாட்டவர் 50,000 பேர் சிறைகளில்

(டாக்கா)

ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான ஆசிய நாட்டவர்கள் உலகநாடுகளின் பல சிறைக் கூடங்களில் தண்டனை அனுபவித்து வருவதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

போலி விஸா, போதை வஸ்து கடத்தல், கள்ளக் கடத்தல், கள்ளத்தனமாக நாடுகளுக்குள் பிரவேசித்தல் உட்பட பல குற்றங்களுக்காக இவர்கள் சிறைத்தண்டனையை அனுபவிக்கின்றனர்.

சிறைத்தண்டனை அனுபவிக்கும் ஆசிய நாட்டவர்களில் பங்களா தேசத்தைச் சேர்ந்தவர்களே கூடுதலாக சிறைகளில் அடைபட்டிருப்பதாகவும், மலேஷியா, சிங்கப்பூர், ரஷ்யா, அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, கனடா, சுவிஸ்சர்லாந்து, தென்கொரியா, தாய்லாந்து, புருனை, ஜப்பான் ஆகிய நாடுகளிலேயே ஆசிய நாட்டவர்கள் கூடுதலாக சிறைத்தண்டனையை அனுபவித்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. —வி-சி

### எம். பி. களுக்கு அ. அட்டை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புதிய தேசிய அடையாள அட்டைகளை ஆட்பதிவுத் திணைக்களம் இம்மாதம் 27ம் திகதி வழங்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ம

### இன்று

(கொழும்புத்துறை)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் இன்று பிற்பகல் 3-00 மணிக்கு அனுஷம் மஹாலஷ்மி விசேஷ அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகள் நடைபெறும். 154

### 15, 154 அ' அட்டை விநியோகம்

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் இருந்து தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் 15,184 பேருக்கு இதுவரை அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் கே. ஜி, ரணசிங்க தெரிவித்துள்ளார்,

அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதில், யாழ் மாவட்ட மக்கள் அக்கறை கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்றுறு ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் மேலும் தெரிவித்தார். ம-ரி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995—03-21**

செவ்வாய் இரவு

08-01 ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08-10 அறிந்துகொள்ளுங்கள் தகவற் களஞ்சியம்
08-20 நலந்தானா - நிகழ்ச்சியில் விற்றமின் குறைபாட்டால் ஏற்படும் பிரச்னைகள்பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்
08-30 செய்திகள்
08-40 கருத்துக்களம் - இ. இராஜேஸ்வரன் எழுதிய ''அக்கறை''
08-50 மலரும் மொட்டுக்கள்

**1995-03-22**

புதன் காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-03-21**

செவ்வாய் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 தமிழிசை
05-30 வானொலி மதியூகம்-12
06-00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்
06-02 இவ்வாரம் இவர்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

### தவக்கால நற்சிந்தனை

''எங்கள் பாவங்களின் காரணத்தால் இன்று இவ்வுலகிலே மிகவும் தாழ்வடைந்துவிட்டோம்.''
(தானியேல் 3:37)

பாவம் பெருகிவிட்ட இவ்வுலகிலே நாம் பெரும் பாவிகள் ஆகியுள்ளோம். அவர் நேசம் நாம் இழந்துள்ளோம். இதனால் நாம் மோசம் போனோம். பாசம் நிறைந்த அவர் கூறுவதைக் கேட்டு, நாம் எம் வாழ்வை மாற்றுவோம். செயல் ஆற்றுவோம்.

— தா. மைதிலி

மரத்தை நட்டால் - நல் வளத்தைப் பெறலாம்

விடுவிக்கப்பட்ட

# பொலிஸாருக்கு

## ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்ட 16 பொலிஸாருக்கும் தலா ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்படுமென்று, பொலிஸ்மா அதிபர் திரு. பிருங்க்டி சில்வா அறிவித்துள்ளார்.

மேற்படி பொலிஸார் தற்போது நாரம்பிட்டியபொலிஸ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர், இவர்களுக்கு சம்பளத்துடன்கூடிய ஒருமாத லீவு வழங்கப்படும். லீவு முடிவடைந்ததும் இவர்கள் தத்தமது சொந்த இடங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதவிஉயர்வுடன் மீண்டும் சேவைக்கு அமர்த்தப்படுவார்கள் என்று பொலிஸ்மா அதிபர் மேலும் கூறியுள்ளார். (வி-இ)

# கொடூர யுத்தம்

## முடிவுக்கு வரவேண்டும்

— ஜீவன் குமாரதுங்க

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கில் தொடரும் கொடூர யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்பதில் தமிழர்கள் மட்டுமன்றி, தென்னிலங்கைச் சிங்கள மக்களும் அக்கறைப் படுகின்றார்கள் என இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவிததுள்ளார்.

மட்டக்களப்பிற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அவர், பொதுமக்கள் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது அபிலாஷைகளை வெளிககாட்டும் வகையிலேயே இலங்கையில் நடைபெற்ற நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களில் பொதுமக்கள் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு வாக்களித்தனர் என்றும் அவர் தெரிவித்தார். க-இ

ஜப்பானில்

# நச்சுவாயு தாக்கு

## 6 பேர் பலி; 3000 மயக்கம்

(டோக்கியோ)

ஜப்பானில் நச்சுவாயு பார்சல் ஒன்றை இனந்தெரியாதவர்கள் வீசியதில் ஆறு பேர் பலியானதாகவும், மூவாயிரம் பேர் மயக்கமுற்றாகதவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜப்பானின் டோக்கியோ நகரில் உள்ள சுரங்க ரயிலில் மக்கள் நெருக்கமாகச் சென்று கொண்டிருந்தபோது இந்த நச்சுவாயுப் பார்சல் வீசப்பட்டதாகவும், சயனைட் நச்சுவைக்காட்டிலும், இது ஐம்பது மடங்கு நச்சுத்தன்மை கொண்டது என்றும், இந்த நச்சுவாயுவினுல் பாதிக்கப்பட்ட அனைவரும் ஜப்பானிலுள்ள 24 வைத்தியசாலைகளில் உடனடியாக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (வி-இ)

உயர்மட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியலமைப்பு, நீதிவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ். வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர், புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சர் எம். எச். எம், அஷ்ரப், பிரதிப்பாதுகாப்புஅமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்த ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்ட முக்கிய அமைச்சர்களாவர்.

தமிழ் மக்களின் அன்றுட பிரச்னை தொடர்பாக அரசு எடுத்த முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு கோரி விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே, பிரபாகரன் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி அதற்கான பதிலை இம்மாதம் 28-ம் திகதிக்கு முன்தரவேண்டும் என காலக்கெடுவை விதித்திருந்தது தெரிந்ததே.

டென்மார்க், பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து விட்டு நேற்று முன்தினம் மாலை நாடு திரும்பிய ஜஞ்திபதியிடம் இக்கடிதம் ஒப்படைக்கப்பட்டது.

இக்கடிதத்தை பார்வையிட்ட ஜனாதிபதி சந்திரிகா இதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சர்கள் பீரிஸ், லஷ்மன் கதிர்காமர், எம். எச். எம். அஷ்ரப், அனுருத்த ரத்வத்த ஜனாதிபதியின் செயலாள திரு. பாலபத்தெண்டி, முப்படைத் தளபதிகள், பொலிஸ் மாஅதிபர், பாதுகாப்புஅமைச்சின் செயலாளர் திரு. சந்திரானந்த டி சில்வா உட்பட பல உயர்மட்ட அதிகாரிகளை உள்ளடகிய உயர்மட்ட மாநாடு ஒன்றைக்கூட்டி தீவிரமாக ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இம்மாநாட்டில் பலத்த கருத்துவேறுபாடுகள் நிலவியதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் அண்மையில் யாழ் நகர் சென்று கொழும்பு திரும்பிய அக்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்ணன்டோவையும், ஜனதிபதி சந்திரிகா அழைத்து பேச்சுக்கள் நடாத்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

திரு, பிரபாகரனின் கடிதம் தொடர்பாக அமைச்சர் பீரிஸ் கருத்துத் தெரிவிக்கையில்;

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு திரு.வே. பிரபாகரன் காலக்கெடு விதித்திருப்பதினல் அமைதித் தீர்வுப் பேச்சுவார்த்தைகள் சீர்குலைந்துவிட்டது என்று அர்த்தமாகாது என தெரிவித்துள்ளார். [வி-ரி-இ)

### புளொட் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் வசம் தமது அமைப்பைச் சேர்ந்த 500 பேர் இருப்பதாகவும் அவர்களைப் புலிகள் உடன் விடுவிக்கவேண்டும் எனவும் புளொட் அமைப்பினர் கோரியுள்ளனர். -இ

### நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)

மன்னர் சிலாவத்துறையில் 1991ம் ஆண்டு மார்ச் மாதம் 19 முதல் 22ம் திகதி வரையிலான 4 நாட்களில், இலங்கை இராணுவ முகாம் தகர்ப்பில் வீரச் சாவைத் தழுவிய மாவீரர்களின் 4ம் ஆண்டு நினைவு நாள் நாவற்குழி நினைவாலய முன்றலில் இன்று செவ்வாய் மாலை 7-30மணிக்கு தென்மராட்சி அரசியல்துறை பொறுப்பாளர் திரு வெற்றிச் செல்வன் தலைமையில் நடைபெறும்

இநநிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். -இ

### இலங்கைத் தமிழ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

4600 பேரும் தலைமன்னருக்கு 4600 பேரும் அனுபபப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப் பட்டது. [க-இ)

### உயர் பெறுமதி

1ம் பக்கத்தொடர்ச்சி)

றது.

இந்த முத்திரைகள் அடுத்த மாதம் 15ம் திகதிக்குள் யாழ். செயலக சிருப்பர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று செரிவிக்கப்படுகிறது. ம-இ

### புலிகள் பிரதி

(1ம் பக்கத் தொடர்சசி)

பேச்சுவார்த்தையின் விபரங்கள் குறித்த தகவல்கள் எதுவும் நேற்று இரவுவரை வெளியிடப்படவில்லை. என்றும் பேச்சுவார்த்தை சுமுகமான நிலையில் இடம்பெற்றதாக அறியப்படுகிறது. (க-இ)

### சம்மாந்துறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தமாணவர்களின் நீண்டகாலப் பிரச்னையாகக் கருதப்பட்ட இப்பிரச்னையை தீர்ப்பதற்கு இக்கல்லூரி நிர்வாகம் எதுவித நடவடிக்கையும் எடுக்காது அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதாகவும் மாணவர்கள் சார்பில் தெரிவிக்கப் பட்டது. (க-இ

### கிழக்கு மாகாணத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேரில் பார்த்த பின் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார் என்று இந்திய வானெலி தெரிவித்தது.

கிழக்கு மாகாணத்தில் படையினரின் தேடுதல் மற்றும் சுற்றிவளைப்பு நிகழ்வுகள் தொடர்ந்து இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. ரி-இ

### இந்தியாவிலிருந்து

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சங்கப் பிரதிநிதி அழைத்து வந்து யாழ். சாவதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் அவர்களை ஒப்படைப்பார்.

இவர்களை தங்கள் சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு, இவர்கள் பற்றிய விடயங்களை அந்தந்தப்பகுதிபிரதேச செயலர்கள் கவனிப்பார்கள் என்று யாழ். அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் தெரிவித்தார், ம-இ

### அத்தியாவசியப்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி. வி. குணரத்ன தெரிவித்துள்ளார்,

அமைச்சர் சி. வி குணரத்ன விடுதலையான பொலிசாரை கொழும்பு வைத்தியசாலையில் நேற்று முன்தினம் பார்வையிடச் சென்றபோதே பொலிஸ் கைதி மேற்கண்டவாறு தெரிவித்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

தடைநீக்கம் செய்யப்பட்ட பொருட்கள் மட்டுமல்ல அத்தியாவசியப்பொருட்கள் ஒழுங்கான முறையில் யாழ். குடாநாட்டிற்கு அனுப்பிவைக்கப்படுவதில்லையென கைதி தெரிவித்தாகவும் அமைச்சர் மேலும் கூறினர். க-இ

# மடுக்கோயில் பகுதி

## அபிவிருத்தி செய்யப்படும்

(கொழும்பு)

மடுகோயிலையும் அதனை சுற்றியுள்ள பகுதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளபபடவுள்ளது

அண்மையில் தென்பகுதியிலிருந்து யாத்திரிகர்கள்குழு ஒன்றுமடுகோயிலுக்கு சென்று திரும்பியதையடுத்து இந்தப்பகுதி அபிவிருத்திசெய்யப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைகள் வீதிகள் என்பன இந்தத்திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்படும்.

இதற்கு விடுதலைப் புலிகளின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. (இ)

# சந்திரிகா அரசு மீது

## மக்களுக்கு சந்தேகம்

(லண்டன்)

ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து எட்டு மாதங்கள் முடிவதற்குள் அதன் செயல்பாடுகளில் மக்களுக்கு பெரும் சந்தேகங்கள் எழத்தொடங்கி விட்டதாக பி. பி. ஸி. நேற்று தெரிவித்தது.

தற்போதைய அரசாங்கம் பற்றி பி பி, ஸி. மேலும் தெரிவிக்கையில்; ''ஆட்சியை கைப்பற்ற முன்பு மேற்படி கட்சி கூறியவற்றுக்கும் தற்போதைய அதன் செயல்பாடுகளுக்கும் பெரும்வேறுபாடுகள் தென்படுகின்றன.

ஜனதிபதி சந்திரிகாவின் அரசு, பெரும்பாலும் ஐ.தே.க. அரசின் முன்னுள் அமைச்சர்களையும் அதன் ஆதரவாளர்களையும் பழிவாங்கும் நடவடிக்கைகளிலேயே கூடுதலான செயல்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இதனுல் ஜனதிபதி சந்திரிகா மீது மககளுக்கு ஒருவிதமான சந்தேகம் எழத்தொடங்கி விட்டது.

ஐ. தே. கட்சியை பழிவாங்கும் நடவடிக்கை நாளடைவில் ஜனதிபதிபதி சந்திரிகாவுக்கே பாதகமாக முடியக் கூடுமென்றும் பி. பி. ஸி. தெரிவித்துள்ளது. (வி-இ)

### புலிகளின்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கையிலேயே மேற்கண்டவாறுஅவர் குறிப்பிட்டுள்ளார்

இது குறித்து அமைச்சர் கதிர்காமர் மேலும் தேரிவித்ததாவது:

அமைதிப் பேச்சுவார்த்தை எந்தக் கட்டத்திலும் முறிந்து போய்விடாமல் இருக்கும் அரசு தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் விடுதலைப் புலிகள் அனுப்பியுள்ள கடிதத்தில் மார்ச் மாதம் 28ம் திகதி என்று ஒருதிகதி குறிப்பிடப் பட்டுள்ளது. அது ஒருகாலக்கெடு அல்ல. 28ம் திகதிக்கு முன்னர் தமது கோரிக்கைகளைக்கவனிக்குமாறு தெரிவித்துள்ளனர். இது ஒரு காலக்கெடு அல்ல.

ஏப்பிரல் மாதம் இரண்டாம் திககிக்கும் 10ம் திகதிக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெறவேண்டும் என நாமும் கூறியிருக்கிறோம். நாம் எமது தூதுக்குழுவை அனுப்பிவைப்போம்' என்றும் குறிப்பிட்டிருக்கிறோமே?

சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லும்போது இப்படியான பிரச்னைகள் ஏற்படுவது வழக்கம். இவை பாரதூரமான பிரச்னைகள் அல்ல. சமாதானப் பேச்சுவார்த்தைகளை நாம் தொடர்ந்தும் மேற்கொள்வோம். சமாதானப் பாதையிலேயே நாம் செல்கின்றோம். பிரச்னைகள், தடைகள் வரும்போது நாம் அஞ்சமாட்டோம்.

விடுதலைப் புலிகள் இந்தக் கடிதத்தின் மூலம் அரசுக்கு எந்தவிதமான நெருக்குதல்களையும் கொடுக்கவில்லை.

அவர்கள் எமக்கு நெருக்குதல் எதுவும் கொடுக்கமாட்டார்கள். தாம் சொல்ல வேண்டியவற்றை இறுக்கமாகச் சொல்கிறார்கள் அவ்வளவுதான். தமக்கு என்ன தேவை என்பதை விடுதலைப் புலிகள் கடுமையாகக் கேட்டுள்ளனர். நாமும் அவர்களுக்குச் சில விடயங்களை இறுக்கமாகச் கூறியிருக்கிறோமே?

ஏப்ரலில் ஆரம்பிக்க உத்தேசித்த அரசியல் பேச்சுவார்த்தைகள் குறித்துப் புலிகள் இந்தக் கடிதத்தில் எதுவும் தெரிவிக்கவில்லை.

இந்த விடயம் தொடர்பாகப் பொறுமையாக இருங்கள் என நான் மக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன். இன்னும் இரண்டொரு நாட்களில் இதற்குப் பதில் கிடைத்துவிடும்.

விடுதலைப் புலிகள் அரசுக்கும் கடுமையான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளபோதிலும், 16 போர்க் கைதிகளை விடுவித்குள்ளனர். இதன் மூலம் அவர்கள் நமக்கு ஒரு சமிக்ஞையை அனுப்பியுள்ளனர். அந்தக் கோணத்தில் தான் நாம் இதனை விளங்கிக் கொள்ளவேண்டும் என்றூர். -இ

### புலிகள் எம்மை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னியா திரும்பிய மேற்படி 2,640 யாத்திரிகர்களையும்வவனியா இராணுவ பிரிகேடியர் எல். பி. பலகெல்ல, வன்னிப் பொலிஸ் அத்தியட்சகர் நிமாலியூகோ உட்படப் பல உயர் அதிகாரிகள் வரவேற்ற போதே யாத்திரிகர்கள் மேற கண்டவாறு தெரிவித்தனர்.

அகதி முகாம்களில் தங்களைத் தங்கவைத்து உணவு உட்படச் சகல வசதிகளையும் ஏற்படுத்தித் தருவதில், விடுதலைப் புலிகளும், தமிழ்ப் பொதுமக்களும் பெரிதும் ஆர்வம் காட்டினர் என்றும் யாத்திரிகர்கள் மேலும் தெரிவித்தனர். க-இ

### புலிகள் பாதுகாப்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களைத்தொடர்ந்து எஞ்சியுள்ள 22 படையினரும் விடுவிக்கப் படுவர் என அரசதரப்பில் எதிர்பார்க்கப்படுகிறது,

பூநகரி இராணுவ முகாம், மாங்குளம், இராணுவமுகாம் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட 20 இராணுவத்தினரும் 'சாகரவர்த்தன' கப்பல் தாக்குதலின் போது கைது செய்யப்பட்ட கடற்படையைச் சேர்ந்த கப்டன் பேபாய கொட மற்றும் ஒரு கடற்படை சிப்பாய் ஆகியோரே விடுவிக்கப்படவுள்ளவர் களாவர் என தெரிவித்துள்ளது. (க - இ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B.